# ஆசிய சாம்பியன்ஷிப் வில்வித்தை | தங்கம் வென்றார் பிரனீத் கவுர்

**பாங்காக்:** ஆசிய சாம்பியன்ஷிப் வில்வித்தை போட்டியில் இந்திய வீராங்கனையான பிரனீத் கவுர் தங்கப் பதக்கம் வென்றார்.

தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்ற இந்த தொடரில் மகளிருக்கான காம்பவுண்ட் தனிநபர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனையான பிரனீத் கவுர், சகநாட்டைச் சேர்ந்த ஜோதி சுரேகாவை எதிர்த்து விளையாடினார். இதில் ஒரு கட்டத்தில் பிரனீத் கவுர் 2 புள்ளிகள் பின்தங்கியிருந்தார். இதன் பின்னர் கடைசி 2 சுற்றில் மீண்டு வந்த அவர், போட்டியை 145-145 என்ற கணக்கில் சமநிலைக்கு கொண்டு வந்தார்.

இதையடுத்து வெற்றியை தீர்மானிக்க ஷூட்-ஆஃப் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் பிரனீத் கவுர் 9-8 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம்வென்றார். சர்வதேச அளவில் பிரனீத் கவுர் வென்ற முதல் தங்கப்பதக்கம் இதுவாக அமைந்தது. 2-வது இடம் பிடித்த ஜோதி சுரேகாவெள்ளிப் பதக்கம் பெற்றார்.

காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அதிதி சுவாமி, பிரியன்ஷ் ஜோடி 156-151 என்ற புள்ளிகள் கணக்கில் தாய்லாந்து ஜோடியை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது. மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவில் ஜோதி சுரேகா, பிரனீத் கவுர், அதிதி சுவாமி ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி இறுதிப் போட்டியில் 234-233 என்ற புள்ளிகள் கணக்கில் சீன தைபே அணியை தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்றது.

ஆடவருக்கான காம்பவுண்ட் தனிநபர் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் வர்மா 147-146 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் ஜூ ஜாஹூனை தோற்கடித்து வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார். ரீகர்வ் பிரிவில் இந்திய வீரர், வீராங்கனைகளில் ஒருவர் கூட கால் இறுதி சுற்றை கடக்கவில்லை. ஆடவர் பிரிவில் தீரஜ் பொம்மதேவரா 3-7 என்ற கணக்கில் சீன தைபேவின் டாங் சி-சுனிடம் தோல்வி அடைந்தார்.

தருன்தீப் ராய் 0-6 என்ற கணக்கில் தென் கொரியாவின் கிம் ஜே டியோக்கிடம் வீழ்ந்தார். ரீகர்வ் மகளிர் பிரிவில் பஜன் கவுர் 0-6 என்ற கணக்கில் முதல் நிலை வீராங்கனையான தென் கொரியாவின் லிம் சியோனிடம் தோல்வி அடைந்தார். திஷா புனியா1-7 என்ற கணக்கில் சீனாவின் ஹாய் லிகனிடம் வீழ்ந்தார்.

## சென்னையில் நவ.18-ல் சர்வதேச செஸ் போட்டி!

**சென்னை:** சீயோன் மற்றும் ஆல்வின் குழுமப் பள்ளிகள் சார்பில் சர்வதேச ஓபன் ஃபிடே ரேட்டிங் ஓபன் செஸ் தொடர் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ.3 லட்சம் பரிசுத் தொகை கொண்ட இந்த போட்டி சென்னை மப்பேடில் உள்ள சீயோன் சர்வதேச பள்ளியில் வரும் 18-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை நடைபெறுகிறது.

அகில இந்திய செஸ் சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்ற இந்த போட்டியை மவுண்ட் செஸ் அகாடமி மற்றும் தமிழ்நாடு மாநில செஸ் சங்கம் இணைந்து நடத்துகிறது. முதல் 30 இடங்களை பிடிக்கும் வீரர்களுக்கு தலா ரூ.30 ஆயிரம் பரிசுத் தொகையும், கோப்பையும் பரிசாக வழங்கப்படும். இதுதவிர 60 பேருக்கு ரொக்கப் பரிசும், 6 பேருக்கு ஆறுதல் பரிசும் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட உள்ளது.

இந்தத் தொடரில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 200 வீரர்கள் பங்கேற்பதை உறுதி செய்துள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். போட்டியில் கலந்து கொள்வதற்கு நுழைவு கட்டணம் ரூ.1,500 ஆகும். போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் வரும் 14-ம் தேதிக்குள் தங்களது பெயரை இணையதளம் வழியாக பதிவு செய்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெல்லியில் மழை: மாசு நீங்கி காற்றின் தரம் சற்றே உயர்ந்தது; மக்கள் நிம்மதி



**புதுடெல்லி:** தலைநகர் டெல்லியில் நேற்றிரவு ஆங்காங்கே மழை பெய்ததால் அங்கு காற்று மாசுபாட்டின் அளவு சற்றே குறைந்துள்ளது. இதனால் இன்று காலை 7 மணியளவில் டெல்லியில் காற்றின் தரக் குறையீடு 408 என்ற அளவில் இருந்தது. நேற்று மாலை இதுவே 437 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

காற்றின் தரக் குறியீடு 0 - 50 வரையில் இருந்தால், காற்றின் தரம் நன்றாக இருப்பதாக அர்த்தம். அதுவே, அக்குறியீடு 400 - 500 ஆக இருந்தால், காற்று மிகவும் மாசடைந்து இருப்பதாக அர்த்தம். காற்றுமாசு தீவிரமாக உள்ள நிலையில் டெல்லியில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்திய வானிலை ஆய்வு மையமானது தீபாவளிக்கு முன்னர் டெல்லியில் காற்றின் தரக் குறியீடு கணிசமாக முன்னேறும் என்று கணித்துள்ளது. பரவலான மழைக்கு மிதமான வாய்ப்பிருப்பதாகவும் கூறியது.
மேலும், வடமேற்கில் இருந்து தென் கிழக்கு நோக்கி காற்றின் திசை மாறுவதாலும், புதிதாக மேற்கில் ஏற்பட்டுள்ள கலக்கத்தால் வடமேற்கு

EVASTALINIASACADEMY

இந்தியாவில் பயிரிக் கழிவு எரிப்பால் ஏற்பட்டுள்ள புகை கட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

பிராந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள முன்னறிவிப்பில் இன்று (நவ.10), டெல்லி, சோஹானா, ரேவாரி, அவுரங்காபாத், ஹோடால் (ஹரியாணா). பீஜ்நாவுர், சகோடி, மீரட், டண்டா,ஹஸ்தினாபுர், சந்த்பூர், தவுராலா, மோடிநகர், கிதோர், அம்ரோஹா ஆகிய பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளது.

டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய் , அதிகரித்து வரும் மாசுபாட்டைச் சமாளிக்க தேசிய தலைநகரில் செயற்கை மழையைத் தூண்ட முயற்சிப்பதாக அண்மையில் தெரிவித்திருந்தார். நவ 20, 21 தேதிகளில் இதற்காக திட்டமிடப்பட்டுள்ள சூழலில் இப்போதைய மழை ஆறுதலாக அமைந்துள்ளது.

**இந்தியா - அமெரிக்கா இடையே 2+2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தை**



**புதுடெல்லி:** இந்தியா - அமெரிக்கா இடையேயான 2+2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில் இரு நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் பங்கேற்றனர்.

இந்தியா - அமெரிக்கா இடையே பாதுகாப்புத்துறை மற்றும் வெளியுறவுத் துறையில் உறவை வலுப்படுத்தும் நோக்கில் 2+2 அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை புதுடெல்லியில் இன்று தொடங்கியது. இதில், இந்திய தரப்பில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். அமெரிக்க தரப்பில் அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை உறுதிப்படுத்துவது, முக்கிய கனிமங்களை பகிர்ந்து கொள்வது மற்றும் தற்போது நிலவும் சர்வதேச சவால்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இந்தியாவும் அமெரிக்காவும் 2+2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்துகின்றன. மேலும், உயர்-தொழில்நுட்பம் போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இதில், ஆலோசிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு முன் செய்தியாளர்களிடம் பேசிய ஜெய்சங்கர், "பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் ஆகியோர் ஏற்படுத்தி உள்ள கூட்டாண்மையை வலுப்படுத்துவது, பகிரப்பட்ட நிகழ்ச்சி நிரலை உருவாக்குவதற்கும் இந்த ஆலோசனைக் கூட்டம் ஒரு வாய்ப்பாக அமையும். முக்கியமான தொழில்நுட்பங்கள், சிவில் விண்வெளியில் ஒத்துழைப்பு மற்றும் முக்கியமான கனிமங்கள் போன்ற புதிய களங்களில் ஒத்துழைப்பை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்" என்று தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் கூறுகையில், "குவாட் மூலம் யு.எஸ்-இந்தியா கூட்டாண்மையை வலுப்படுத்துவது உட்பட சுதந்திரமான மற்றும் திறந்த, வளமான, பாதுகாப்பான மற்றும் நெகிழ்ச்சியான இந்தோ-பசிபிக் பகுதியை இரு தரப்பும் ஊக்குவிக்கின்றன. சர்வதேச அமைதி, பாதுகாப்பு மற்றும் விதிகளின் அடிப்படையிலான ஒழுங்கை மேம்படுத்துதல்,

இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் அமெரிக்கா கவனம் செலுத்துவதாக" அவர் கூறினார்.

இந்தியா-யு.எஸ். இருதரப்பு உறவு, ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவை இரு நாடுகளின் ஒத்துழைப்பு அதிகரித்து வருவதைக் காட்டுவதாவும், பாதுகாப்பு ஒத்துழைப்பு நமது இருதரப்பு உறவின் மிக முக்கியமான தூண்களில் ஒன்று என்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார். மேலும், திறன் மேம்பாட்டிற்கான களங்களில் அமெரிக்காவுடன் நெருக்கமாக பணியாற்றுவதை இந்தியா எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ஆஸ்டின் தனது தொடக்க உரையில், உலகின் இரண்டு பெரிய ஜனநாயக நாடுகளான இந்தியாவும், அமெரிக்காவும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதோடு, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதும், பொதுவான இலக்குகளைக் கண்டறிந்து மக்களுக்கு வழங்குவதும் முன்னெப்போதையும் விட தற்போது முக்கியமானது என கூறினார். மேலும், அவர், இந்தியா - அமெரிக்கா இடையேயான கூட்டாண்மையின் எதிர்காலம், பாதுகாப்பான உலகத்தை நோக்கிய நமது பொதுவான முயற்சிகள் பற்றிய நம்பிக்கையை அளிக்கிறது என்றும் ஆஸ்டின் கூறினார்

EVA ST